# யாழ்ப்பாணக் கல்வி வலயம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2017

வரலாறு 1810

தரம்: 08

சுட்டெண்:.................................. நேரம்: 2 மணித்தியாலம்

பகுதி - I

❖ மிகச்சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதன் கீழ்க் கோடிடுக.

01) பண்டுகாபய மன்னனால் கட்டப்பட்டதாகக் கருதப்படும் அபய வாவியின் இன்றைய பெயரைப் பின்வருவனவற்றில் இருந்து தெரிவு செய்க.
1) பசவக்குளம் 2) ஜயவாவி 3) காமினி வாவி 4) யோத வாவி

02) இலங்கையில் பெரிய குளங்களைக் கட்ட ஆரம்பித்த மன்னர்
1) மகாசேனன் 2) பண்டுகாபயன் 3) வசபன் 4) தாதுசேனன்

03) புராதன கல்வெட்டுக்களில் 'தோபஷ' என அழைக்கப்பட்டவர்கள் ஈடுபட்ட தொழில்
1) செங்கல் உற்பத்தி 2) தகர உற்பத்தி 3) இரும்பு உற்பத்தி 4) செம்பு உற்பத்தி

04) கீழே தரப்படும் விகாரைகளில் வலகம்பா, மகாசேன மன்னர்களால் கட்டப்பட்ட விகாரைகளை முறையே தெரிவு செய்க.
1) தூபராம, மிருஷவெட்டி 2) அபயகிரி, தூபராம
3) றுவன் வெலிசாய, ஜேதவனராமய 4) அபயகிரி, ஜேத்தவன ராமய

05) மலைநாட்டை கோட்டை இராச்சியத்தில் இருந்து விடுவித்து, தனி அரசு ஒன்றினை உருவாக்கிய கண்டி இராச்சியத்தின் முதலாவது மன்னன்
1) ஜோதிய இளவரசன் 2) ஜயவீரபண்டார
3) சேனாசம்மத விக்கிரமபாகு 4) கரலியத்த பண்டார

06) 1594, 1602 ஆகிய ஆண்டுகளில் 1ஆம் விமல தர்ம சூரியன் போர்த்துக்கேயரைத் தோற்கடித்த இடங்கள் இரண்டினையும் முறையே தெரிவு செய்க.
1) தந்துரே, பலன 2) ரந்தெனிவெல, பலன
3) கன்னொருவ, பலன 4) தந்துரே, கன்னொருவ

07) 1638 ஆம் ஆண்டில் 2ஆம் இராஜசிங்க மன்னன் கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்த போது அவ் இராச்சியத்தை ஆக்கிரமித்த போர்த்துக்கேய கப்டன் ஜெனரல்
1) தியோகு - த - மோ லோ - கஸ்லோ 2) கொன்ஸ்தாந்தைன் தசா
3) பெட்ரோ லோப்ஸ்டி சூஸா 4) தொன்ஜெரனிமோ டி அஸவேது

08) கண்டி இராச்சியத்தில் இரும்பு உற்பத்திக்கு பிரபலம் பெற்றிருந்த பிரதேசம்
1) கிரிவவுல பிரதேசம் 2) தும்பறைப் பிரதேசம்
3) மெதமகதுவர பிரதேசம் 4) கொத்மலைப் பிரதேசம்

09) கி.பி 1453 ஆம் ஆண்டில் இஸ்லாமியரான துருக்கியரால் கைப்பற்றப்பட்ட நகரம்
1) வெனிஸ் 2) ஏதென்ஸ்
3) கொன்ஸ்தாந்தி நோபிள் 4) புளோரன்ஸ்

10) மத்திய கால இறுதியில் இத்தாலியில் உருவாக்கப்பட்ட பல்லைக் கழகம்
1) ஒக்ஸ்போட் 2) கேம்பிரிஸ் 3) பொலஞ்ஞோ 4) பரிஸ்

11) புதிய கலைகளின் தோற்றத்தின் மத்திய நிலையமாக விளங்கிய இத்தாலியின் நகரம்
1) ஜெனோவா 2) புளோரன்ஸ் 3) ரோம் 4) வெனிஸ்

12) மனித உடலின் குருதிச்சுற்றோட்டம் பற்றிய முக்கிய தகவல்களைக் கண்டறிந்தவர்
1) வில்லியம் ஹார்வி 2) பெரசல்ஸ்
3) மைக்கல் சர்டேஸ் 4) தோமஸ் அல்வா எடிசன்



kalvi.lk

13) மறுமலர்ச்சிக் காலத்தில் உலகம் கோள வடிவமானது என நிரூபித்தவர்

1) கலிலியோ கலிலி 2) நிக்கலஸ் கொப்பர்னிக்கஸ்
3) தொலமி 4) கெப்லர்

14) நாடுகாண் பயணத்தில் ஈடுபட்ட கிறிஸ்தோபர் கொலம்பஸ் அத்திலாந்திக் சமுத்திரத்தில் தரை இறங்கிய தீவு

1) கியூபா 2) கெயிட்டி 3) கிஸ்பானியலோ 4) யமேக்கா

15) ஒல்லாந்தரின் கீழைத்தேச மத்திய நிலையம்

1) பத்தேவியா 2) கோவா 3) பம்பாய் 4) கல்கத்தா

16) ஆசியாவிற்கு முதன்முதலாக வருகை தந்த ஐரோப்பிய இனத்தவர்கள்

1) ஆங்கிலேயர் 2) ஒல்லாந்தர் 3) போர்த்துக்கேயர் 4) பிரான்சியர்

17) போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும் போது யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி செய்த மன்னன்

1) விஜய கூழங்கை 2) வரோதயன் 3) பரராஜ சேகரன் 4) சங்கிலி

18) போர்த்துக்கேயரின் பொருளாதாரப் பிரிவிற்குப் பொறுப்பாக இருந்த அதிகாரி

1) விடோர் த பெசென்டா 3) கப்டன் ஜெனஸ்
3) விசுகர் 4) மயோரால

19) கறுவா வர்த்தகத்திற்காகப் போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட தனியான திணைக்களம்

1) மகாபத்தே திணைக்களம் 2) விவசாயத் திணைக்களம்
3) கறுவா விற்பனை திணைக்களம் 4) கறுவா ஏல விற்பனைத் திணைக்களம்

20) கீழைத்தேசத்தில் போர்த்துக்கேயர் அடைந்த பெரும் தோல்வி எனக் கருதப்படும் யுத்தம் நடைபெற்ற இடம்

1) தந்துரே 2) பலன 3) ரந்தெனிவெல 4) முல்லேரியா

(20x2=40புள்ளிகள்)

## பகுதி – II


- **முதலாம் வினாவில் அ, ஆ பகுதிகள் கட்டாயமானது.**
- **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**(01)** அ) 1) மூன்றாம் தவணையில் நீர் செய்த கணிப்பீட்டு வகையைக் குறிப்பிடுக. (1புள்ளி)

2) கணிப்பீட்டிற்காகப் பயன்படுத்திய தர உள்ளீட்டுப் பொருட்கள் இரண்டு தருக. (2புள்ளி)

3) கணிப்பீட்டினால் நீர் பெற்றுக் கொண்ட அனுகூலங்கள் இரண்டு தருக. (3புள்ளி)

ஆ) உலகப்படத்தில் ஆங்கில எழுத்துக்கள் குறிக்கும் இடங்களை இனங்கண்டு எழுதுக.




1. நன்னம்பிக்கைமுனை (     ) 2. போத்துக்கல் (     )
3. பிலிப்பைன்ஸ் தீவுகள் (     ) 4. செங்கடல் (     )
5. கொன்ஸ் தாந்திநோபிள் (     ) 6. மலாக்கா நீரிணை (     )

(6புள்ளி)



kalvi.lk

(02) 1) பின்வரும் குளங்களை அமைந்த மன்னர்களை எழுதுக.

a. பசவக்குளம் - b. திஸாவாவி - c. மகாகணதறவாவி-

(3புள்ளி)

2) இராசரட்டைக் காலத்தில் அமைக்கப்பட்ட கட்டங்களில்

a. சமயசார்புடைய கட்டங்கள் இரண்டு எழுதுக.

(2புள்ளி)

b. சமய சார்பற்ற கட்டங்கள் இரண்டு எழுதுக.

(2புள்ளி)

3) குளம் ஒன்றின் பிரதான பகுதிகள் ஐந்து தருக.

(5புள்ளி)

(03) 1) பின்வருவோர் கத்தோலிக்க சமயத்தைத் தழுவிய பின்னர் வைத்துக் கொண்ட பெயர்களை எழுதுக.

a. யமசிங்க பண்டார - b. குசமாசன தேவி - c. கோணப்பு பண்டார -

(3புள்ளி)

2) இரண்டாம் இராஜசிங்க மன்னனின் ஆட்சி முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள் இரண்டு தருக.

(4புள்ளி)

3) பின்வரும் ஆண்டுகளில் நடைபெற்ற போர்களை எழுதுக.

i. a. கி.பி 1594 -

b. கி.பி 1602 -

(2புள்ளி)

ii. கண்டிக்காலத்திற்குரிய ஓவியங்கள் காணப்படும் இடங்கள் மூன்று தருக.

(3புள்ளி)

(04) 1) மறுமலர்ச்சிக்காலத்தில் வாழ்ந்த பின்வரும் நூலாசிரியர்களின் தாய்நாடுகளைக் குறிப்பிடுக.

a. தாந்தே - b. வில்லியம் ஷேக்ஸ்பியர் - c. இராஸ்மஸ் -

(3புள்ளி)

2) மறுமலர்ச்சிக்கால கலைப்படைப்புக்களின் இயல்புகள் இரண்டு எழுதுக.

(4புள்ளி)

3) a. மத்தியகால இறுதியில் ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற பல்கலைக்கழகங்கள் இரண்டு எழுதுக.

(2புள்ளி)

b. மறுமலர்ச்சி ஏற்படுவதற்கான காரணங்கள் மூன்று தருக.

(3புள்ளி)

(05) 1) நாடுகாண் பயணங்களின் ஈடுபட்ட ஐரோப்பிய நாடுகள் மூன்று தருக.

(3புள்ளி)

2) நாடுகாண் பயணங்களில் ஈடுபட்ட நாடுகாண் பயணிகள் நால்வரை எழுதுக.

(4புள்ளி)

3) i. பின்வரும் நாடுகளைக் கண்டுபிடித்த நாடுகாண் பயணிகளைக் குறிப்பிடுக.

a. மெக்சிக்கோ - b. பேரு -

(2புள்ளி)

ii. ஐரோப்பியர் ஆசியாவிற்கு வந்தமைக்கான நோக்கங்கள் மூன்று தருக.

(3புள்ளி)

(06) 1) போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும் போது காணப்பட்ட மூன்று இராச்சியங்களையும் எழுதுக.

(3புள்ளி)

2) போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கைக்கு வந்த சமயக் குழுக்கள் நான்கையும் எழுதுக.

(4புள்ளி)

3) போர்த்துக்கேயர் மக்களை கத்தோலிக்க சமயத்திற்கு மாற்றுவதற்குப் பின்பற்றிய முறைகள் ஐந்து தருக.

(5புள்ளி)



kalvi.lk

kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.*

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

**Whatsapp**
**075 287 1457**